சார்புநீதிமன்றம், தேவகோட்டை,

முன்னிலை: திருமதி. P.கலைநிலா, எம்.எல்.,

சார்புநீதிபதி, தேவகோட்டை.

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 03-ம் நாள் வெள்ளிக்கிழமை

2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் ஆனித் திங்கள்19-ம் நாள்

முதலேற்பு வழக்கு எண்.247/2023.

CNR.No.TNSV050005082023.

******

சுவாமிநாதன்

...வாதி

....எதிர்...

1.ஆனந்தவள்ளி

2.சிதம்பரம்

...பிரதிவாதிகள்

இவ்வழக்கு 08.06.2026ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.PL.முருகன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.J.K.சண்முகசேகர் அவர்கள் வக்காலத்து தாக்கல் செய்தும், பின்னீடு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், 1, 2 பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத்தால், பிரதிவாதிகளை தோன்றாதரப்பினர்களாக வைக்கப்பட்டுள்ள நிலையிலும், வாதி தரப்பில் வாதுரை கேட்டும், இதுநாள் வரையில் இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ...

## தீர்ப்புரை

வழக்குரையில் சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் வாதிக்கு 1/3 பாகத்திற்கு முதல்நிலைத் தீர்ப்பாணை வழங்கியும், வாதிக்கு பிரதிவாதி வழக்கு செலவுத் தொகையை வழங்கிடவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் சுருக்கம்</u>:**

வழக்கிடைச் சொத்தான 1 ஏக்கர் இடமும் காரைக்குடி தாலுகா, இலுப்பக்குடி கிராமத்தில் அமைந்துள்ளது. மேற்படி வழக்கிடைச் சொத்தான 1 ஏக்கர் மற்றும் அதனுடன் சேர்ந்த 4 ஏக்கர் ஆக மொத்தம் 5 ஏக்கர் நிலத்தையும் ஆதியில் வேலுச்சாமி கடந்த 27.09.1985ம் ஆண்டு பெரியமுத்து என்பவரிடம் இருந்து பதிவுக் கிரையம் பெற்று அனுபவமும் உரிமையும் செய்து வந்தார். மேற்படி வேலுச்சாமி அனுபவமும் உரிமையும் செய்து வந்த மேற்படி 5 ஏக்கர் இடத்தில், அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே 4 ஏக்கர் நிலத்தை பிறத்தியில் கிரையம் செய்து கொடுத்துவிட்டு பாக்கி இருந்த 1 ஏக்கர் இடத்தையும் அவருடைய அனுபவத்திலும் உரிமையிலும் வைத்திருந்தார். மேற்படி வேலுச்சாமி சொர்ணவள்ளி தம்பதிகளுக்கு முறையே விஜய்போஸ், வாதி சாமிநாதன் மற்றும் 2ம் பிரதிவாதியான சிதம்பரம் ஆகிய மூன்று ஆண் மக்கள் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி வேலுச்சாமியும் கடந்த 11.12.2005ல் காலமாகிவிட்டார். அதற்கான இறப்புச் சான்றிதழ் காரைக்குடி தலைமையிடத்து கூடுதல் தாசில்தார் வழங்கியுள்ளார். மேற்படி வேலுச்சாமியின் இறப்பிற்கு பின்னர் சொர்ணவள்ளி, விஜய்போஸ், சாமிநாதன் மற்றும் சிதம்பரம் மட்டுமே நேரடி வாரிசுகளாவார்கள். அதற்கான வாரிசுச் சான்றிதழை காரைக்குடி வட்டாட்சியர் வழங்கியுள்ளார். மேற்படி வாரிசுகளில் வேலுச்சாமியின் மனைவியும் வாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் தாயாருமான சொர்ணவள்ளி கடந்த 31.10.2012ல் காலமாகிவிட்டார். அதற்கான இறப்புச் சான்றிதழ் இலுப்பக்குடி கிராம நிர்வாக அலுவலர் வழங்கியுள்ளார். வேலுச்சாமி மற்றும் சொர்ணவள்ளி காலத்திற்குப் பிறகு மேற்படி வழக்கிடைச் சொத்தான 1 ஏக்கர் இடத்தையும் மேற்படி வேலுச்சாமி சொர்ணவள்ளியின் வாரிசுகளான விஜய்போஸ், சாமிநாதன் மற்றும் சிதம்பரம் ஆகியோர் அனுபவமும் உரிமையும் செய்துவந்து, பின்னீடு மேற்படி விஜய்போஸும் கடந்த 01.08.2017ல் காலமாகிவிட்டார். இந்நிலையில், மேற்படி வேலுச்சாமியின் அனுபவத்திலும் உரிமையிலும் இருந்து வந்த பிரிவினை இல்லாத 1 ஏக்கர் இடத்தில் மேற்படி வேலுச்சாமியின் நேரடியான வாரிசுகளில் ஒருவரான விஜய்போஸ் அவருடைய மனைவியான 1ம் பிரதிவாதிக்கு கடந்த 16.07.2007ல் பதிவு செய்யப்பட்ட இனாம்

செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் மேற்படி சொத்தில் 3ல் 1பங்கை உரிமை மாற்றம் செய்து கொடுத்துவிட்டார். மேற்படி இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்திலேயே பத்திரத்தை எழுதிக்கொடுத்த விஜய்போஸ் "வாரிசு முறையில் நானும் என் சகோதரர்களும் அடைந்து பின்னீடு நாங்கள் வாய்மொழியாக பிரிவினை செய்துகொண்ட" என குறிப்பிட்டே 1ம் பிரதிவாதி இனாம் செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் மேற்படி வேலுச்சாமியின் சொத்துக்களில் வாதிக்கு 1 பங்கும், 2ம் பிரதிவாதிக்கு ஒரு பங்கும் உள்ளது. மேற்படி சொத்துக்கள் தொடர்பாக மேற்படி வேலுச்சாமி உயில் ஏதும் எழுதிவைக்காமல் இறந்துவிட்டதால் பேரன்கள் என்ற முறையில் விஜயபோஸின் மக்களை பாலசுப்பிரமணியன், சந்திரபோஸ் மற்றும் விஜயபோஸின் மகன் ஆகியோருக்கு மேற்படி விஜயபோஸின் 1 பாகத்தில் மட்டுமே பாகம் உள்ளதால் மேற்படி விஜயபோஸின் வாரிசுகளை இந்த வழக்கில் வாதி தரப்பினர்களாகச் சேர்க்கவில்லை. மேலும், வேலுச்சாமியின் நேரடி வாரிசுகளான விஜயபோஸ், வாதி சாமிநாதன், 2ம் பிரதிவாதி சிதம்பரம் ஆகியோர்கள் வாய்மொழியாக பிரித்து கொண்டுவிட்டதால் விஜயபோஸின் மக்கள் இந்த வழக்கினை பொருத்தவரை அவசியமற்ற தரப்பினர்கள் என கருதி அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக வாதி சேர்க்கவில்லை.

1ம் பிரதிவாதியும் தன்னுடைய கணவர் விஜயபோஸ் காலமான பிறகு அவருடைய கணவர் விஜயபோஸின் பாகத்திற்கு உரிய சொத்துக்களை மட்டும் பிறத்தியில் கிரையம் செய்துகொடுத்து அவருடைய பணத்தேவையை பூர்த்தி செய்துகொள்வதாக மேற்படி சொத்தின் மற்ற பாகஸ்தர்களை வாதி மற்றும் 2ம் பிரதிவாதியிடம் வாய்மொழியாக கேட்டுக்கொண்டதின் பேரில் மேற்படி வாதியும் 2ம் பிரதிவாதியும் அவர்களுடைய அண்ணன் விஜயபோஸ் பேரில் கொண்ட பாசத்தாலும் அவருடைய மனைவியான 1ம் பிரதிவாதியின் பணக் கஷ்டத்தைத் தீர்க்கும் விதமாகவும், 1ம் பிரதிவாதி கோரியபடி மேற்படி விஜயபோஸின் பாகத்தை மட்டும் பிறத்தியில் கிரையம் செய்துகொடுக்க வாதியும் 2ம் பிரதிவாதியும் சம்மதம் தெரிவித்தனர். வழக்கிடைச் சொத்தும் காலியிடமாக இருந்ததாலும், மேற்படி சொத்துக்களும் வாய்மொழியாக வேலுச்சாமியின் மூன்று மகன்களுக்கும் மேற்படி

சொத்தில் 3 பாகமாக உத்தேசமாக பிரித்துக்கொண்டார்களே தவிர மேற்படி சொத்தை பொருத்து துல்லியமாக அளவையரைக் கொண்டு அளந்து பிரித்துக் கொள்ளவில்லை. சகோதரர்கள் ஒருவர் மீது மற்றொருவர் கொண்ட நம்பிக்கையின் அடிப்படையில் அவரவர் பாகமாக கருதிய இடத்தை அவரவர் பாகத்தை பொதுவாக வைத்து அனுபவம் செய்து வந்தனர். எனவேதான் விஜயபோஸின் மனைவியான 1ம் பிரதிவாதி, விஜயபோஸின் பாகத்திற்கு கிடைத்த சொத்தை பிறத்தியில் கிரையம் செய்துகொடுத்த பொழுதும் வாதியோ, 2ம் பிரதிவாதியோ எவ்வித ஆட்சேபனையும் செய்யவில்லை. தற்பொழுது வாதியும் 2ம் பிரதிவாதியும், இனியும் மேற்படி சொத்தை முறைப்படி பிரிவினை செய்யாமல் அனுபவம் செய்துவருவது வரும் காலங்களில் வாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் வாரிசுகளுக்கு உகந்ததாக இருக்காது என கருதி மேற்படி வேலுச்சாமியின் சொத்தில் விஜயபோஸின் பாகம் நீக்கி பாக்கி இரு பங்கை வாதியும், 2ம் பிரதிவாதியும் கடந்த 2022ம் ஆண்டு ஜூலை மாதம் 20ம் தேதியன்று நடவடிக்கை மேற்கொண்டனர். அப்பொழுதுதான் 1ம் பிரதிவாதி வேலுச்சாமியின் மற்ற மகன்களான வாதி மற்றும் 2ம் பிரதிவாதியை ஏமாற்றி மோசடி செய்யும் நோக்கத்துடன், மேற்படி வாதி மற்றும் 2ம் பிரதிவாதிக்கும் சேர்த்து பாத்தியப்பட்ட பாகத்தில் கோட்டையூரைச் சேர்ந்த நாகராஜன் மனைவி ஜெயந்தி, காரைக்குடி பரதன் மகன் கிருஷ்ணகுமார், காரைக்குடி அண்ணாமலை மகன் ராமசாமி மற்றும் காரைக்குடி கிருஷ்ணன் மனைவி காளியம்மை ஆகியோர்களுக்கு கிரையம் கொடுத்துள்ள இடங்களிலும் சில பகுதிகள் வருகின்றன என்ற விபரம் தெரியவந்தது. எனவே வாதியும் மேற்கண்ட விபரம் தொடர்பாக 1ம் பிரதிவாதிக்கும் மற்றும் அவர் கிரையம் கொடுத்த மேற்படி 5 நபர்களுக்கும் சேர்த்து தன்னுடைய வழக்கறிஞர் மூலம் மேற்படி வேலுச்சாமி கிரையம் பெற்றது 5 ஏக்கர் இடமாகும். மேற்படி இடத்தில் மேற்படி வேலுச்சாமி உயிருடன் இருந்த காலத்திலேயே 4 ஏக்கர் இடத்தை பிறத்தியில் கிரையம் செய்து கொடுத்தது போக பாக்கியுள்ள 1 ஏக்கர் இடமான வழக்கிடைச் சொத்தில் வேலுச்சாமியின் மக்கள் 3 பேருக்கும் ஆளுக்கொரு பாகம் உள்ளது. அதன்படி விஜயபோஸிற்கு கிடைத்த பாகம் போக பாக்கியுள்ள வாதி மற்றும் 2ம் பிரதிவாதி பாகத்திற்குரிய சொத்துக்களில் ஏதேனும் பந்தக பராதீனம் செய்து

இருந்தால் அதை வாதியின் பாகத்தையோ, 2ம் பிரதிவாதியின் பாகத்தையோ கட்டுப்படுத்தாது எனவும், மேலும் மேற்படி வாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் பாகத்தை கிரையம் பெற்ற நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், அறிவிப்பு கடந்த 13.10.2022ம் தேதி அனுப்பினார். மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட 1ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற மேற்படி 4 நபர்களும் எவ்வித பதிலும் அனுப்பவில்லை. ஆனால் 1ம் பிரதிவாதி மட்டும் மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டு, தன்னுடைய வழக்கறிஞர் மூலம் பொய்யான காரணங்களைக் கூறி கடந்த 27.10.2022ம் தேதி பதில் அறிவிப்பு அனுப்பினார். வாதியும் இவ்வழக்கின் மூலம் முறைப்படி அளந்து பாகம் பிரிக்கப்படும் சொத்தில் 1ம் பிரதிவாதியும் கிரையம் பெற்ற மேற்படி 4 நபர்களின் சொத்துக்கள் மேற்படி வாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்படும் சொத்தில் கட்டுப்பட்டால் அந்த பகுதியை கிரையம் பெற்ற நபர் மீது சட்டப்படி தனி நடவடிக்கை நீதிமன்றத்தின் மூலம்பெறும் உரிமையை சட்டப்படி தக்க வைத்துள்ளார். மேலும் இந்த வழக்கில் முறைப்படி பாகம் பிரித்துக் கொடுக்கக் கோரி பரிகாரம் மட்டும் கேட்டுள்ளதால் வாதி இவ்வழக்கின் மேற்படி 1ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற மேற்படி 4 நபர்களை தரப்பனர்களாகச் சேர்க்கவில்லை. எனவே வாதியும் நீதிமன்ற வரம்பிற்குட்பட்ட மேற்படி வேலுச்சாமிக்குப் பாத்தியப்பட்ட 1 ஏக்கர் சொத்தில் 3ல் 1 பாகத்தினை நயமிடர் பார்த்துப் பிரிவினை செய்து தரக்கோரி இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டும் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படவில்லை. பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் அவர்கள் ஆஜராகாததால் பிரதிவாதிகளை தோன்றாதரப்பினர்களாக வைக்கப்பட்டுள்ளார்கள்.

4) வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியிடப்படவில்லை.

5) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை வாதியால் தொடரப்பட்ட இவ்வழக்கு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

**6) பிரச்சனைக்காக தீர்வு :-**

இவ்வழக்கின் பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர்களாக இருந்து வருகிறார்கள். வாதி தரப்பில், வாதி வா.சா.1 விசாரிக்கப்பட்டு, வா.சா.1 தரப்பில் வா.சா.ஆ.1 முதல் 8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வா.சா.ஆ.1 என்பது 27.09.1985ம் தேதியிட்ட வேலுச்சாமி பெரியமுத்துவிடம் இருந்து பதிவுக் கிரையம் பெற்ற கிரைய பத்திரம் ஆகவும், வா.சா.ஆ.2 என்பது வேலுச்சாமி 11.12.2005ம் தேதியன்று இறந்ததற்கான காரைக்குடி தலைமையிடத்து கூடுதல் தாசில்தார் வழங்கிய இறப்புச் சான்றிதழ் ஆகவும், வா.சா.ஆ.3 என்பது காரைக்குடி வட்டாட்சியர் வழங்கிய வேலுச்சாமியின் வாரிசு சான்றிதழ் ஆகவும், வா.சா.ஆ.4 என்பது சொர்ணவள்ளி 31.10.2012ல் இறந்ததற்கான இலுப்பக்குடி கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய இறப்புச் சான்றிதழ் ஆகவும், வா.சா.ஆ.5 என்பது விஜயபோஸ் 01.08.2017ல் இறந்ததற்கான அரியக்குடி பிறப்பு இறப்பு பதிவு அலுவலர் வழங்கிய இறப்புச் சான்றிதழ் ஆகவும், வா.சா.ஆ.6 என்பது 16.07.2008ம் தேதியிட்ட விஜயபோஸ் அவரது மனைவியான 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் ஆகவும், வா.சா.ஆ.7 என்பது 13.10.2022ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு ஆகவும், வா.சா.ஆ.8 என்பது 27.10.2022ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதியின் பதில் அறிவிப்பு ஆகவும், தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியோ, சான்றாவணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை.

7) வாதி வழக்குபடி, வழக்கிடைச் சொத்தான 1 ஏக்கர் இடமும் காரைக்குடி தாலுகா, இலுப்பக்குடி கிராமத்தில் அமைந்துள்ளதாகவும், மேற்படி வழக்கிடைச் சொத்தான 1 ஏக்கர் மற்றும் அதனுடன் சேர்ந்த 4 ஏக்கர் ஆக மொத்தம் 5 ஏக்கர் நிலத்தையும் ஆதியில் வேலுச்சாமி கடந்த 27.09.1985ம் ஆண்டு பெரியமுத்து என்பவரிடம் இருந்து பதிவுக் கிரையம் பெற்று அனுபவமும் உரிமையும் செய்து வந்ததாகவும், மேற்படி வேலுச்சாமி அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே 4 ஏக்கர்

நிலத்தை பிறத்தியில் கிரையம் செய்து கொடுத்துவிட்டு பாக்கி இருந்த 1 ஏக்கர் இடத்தையும் அவருடைய அனுபவத்திலும் உரிமையிலும் வைத்திருந்ததாகவும், மேற்படி வேலுச்சாமியும் கடந்த 11.12.2005ல் காலமாகிவிட்டதாகவும், மேற்படி வேலுச்சாமியின் இறப்பிற்கு பின்னர் சொர்ணவள்ளி, விஜய்போஸ், சாமிநாதன் மற்றும் சிதம்பரம் மட்டுமே நேரடி வாரிசுகளாகவும், அதற்கான வாரிசுச் சான்றிதழை காரைக்குடி வட்டாட்சியர் வழங்கியுள்ளதாகவும், மேற்படி வழக்கிடைச் சொத்தான 1 ஏக்கர் இடத்தையும் மேற்படி வேலுச்சாமி சொர்ணவள்ளியின் வாரிசுகளான விஜய்போஸ், சாமிநாதன் மற்றும் சிதம்பரம் ஆகியோர் அனுபவமும் உரிமையும் செய்துவந்து, பின்னீடு மேற்படி விஜய்போஸும் கடந்த 01.08.2017ல் காலமாகிவிட்டதால், மேற்படி வேலுச்சாமியின் அனுபவத்திலும் உரிமையிலும் இருந்து வந்த பிரிவினை இல்லாத 1 ஏக்கர் இடத்தில் மேற்படி வேலுச்சாமியின் நேரடியான வாரிசுகளில் ஒருவரான விஜய்போஸ் அவருடைய மனைவியான 1ம் பிரதிவாதிக்கு கடந்த 16.07.2007ல் பதிவு செய்யப்பட்ட இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் மேற்படி சொத்தில் 3ல் 1பங்கை உரிமை மாற்றம் செய்து கொடுத்துவிட்டதாகவும், மேற்படி சொத்துக்கள் தொடர்பாக வேலுச்சாமி உயில் ஏதும் எழுதிவைக்காமல் இறந்துவிட்டதால் பேரன்கள் என்ற முறையில் விஜயபோஸின் மக்களை பாலசுப்பிரமணியன், சந்திரபோஸ் மற்றும் விஜயபோஸின் மகன் ஆகியோருக்கு மேற்படி விஜயபோஸின் 1 பாகத்தில் மட்டுமே பாகம் உள்ளதால் மேற்படி விஜயபோஸின் வாரிசுகளை இந்த வழக்கில் வாதி தரப்பினர்ளாகச் சேர்க்காததால், மேலும், வேலுச்சாமியின் நேரடி வாரிசுகளான விஜயபோஸ், வாதி சாமிநாதன், 2ம் பிரதிவாதி சிதம்பரம் ஆகியோர்கள் வாய்மொழியாக பிரித்து கொண்டுவிட்டதால் விஜயபோஸின் மக்கள் இந்த வழக்கினை பொருத்தவரை அவசியமற்ற தரப்பினர்கள் என கருதி அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக வாதி சேர்க்கவில்லை எனக் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், 1ம் பிரதிவாதி தன்னுடைய கணவர் விஜயபோஸ் காலமான பிறகு அவருடைய கணவர் விஜயபோஸின் பாகத்திற்கு உரிய சொத்துக்களை மட்டும் பிறத்தியில் கிரையம் செய்துகொடுத்து அவருடைய பணத்தேவையை பூர்த்தி

செய்துகொள்வதாக மேற்படி சொத்தின் மற்ற பாகஸ்தர்களை வாதி மற்றும் 2ம் பிரதிவாதியிடம் வாய்மொழியாக கேட்டுக்கொண்டதின் பேரில் வாதியும் 2ம் பிரதிவாதியும் அவர்களுடைய அண்ணன் விஜயபோஸ் பேரில் கொண்ட பாசத்தாலும் அவருடைய மனைவியான 1ம் பிரதிவாதியின் பணக் கஷ்டத்தைத் தீர்க்கும் விதமாகவும், 1ம் பிரதிவாதி கோரியபடி மேற்படி விஜயபோஸின் பாகத்தை மட்டும் பிறத்தியில் கிரையம் செய்துகொடுக்க வாதியும் 2ம் பிரதிவாதியும் சம்மதம் தெரிவித்ததாகவும், மேலும் சகோதரர்கள் ஒருவர் மீது மற்றொருவர் கொண்ட நம்பிக்கையின் அடிப்படையில் அவரவர் பாகமாக கருதிய இடத்தை அவரவர் பாகத்தை பொதுவாக வைத்து அனுபவம் செய்து வந்தநிலையில், சொத்தை முறைப்படி பிரிவினை செய்யாமல் அனுபவம் செய்துவருவது வரும் காலங்களில் வாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் வாரிசுகளுக்கு உகந்ததாக இருக்காது என கருதி மேற்படி வேலுச்சாமியின் சொத்தில் விஜயபோஸின் பாகம் நீக்கி பாக்கி இரு பங்கை வாதியும், 2ம் பிரதிவாதியும் கடந்த 2022ம் ஆண்டு ஜூலை மாதம் 20ம் தேதியன்று நடவடிக்கை மேற்கொண்டபோது வாதி மற்றும் 2ம் பிரதிவாதிக்கும் சேர்த்து பாத்தியப்பட்ட பாகத்தில் கோட்டையூரைச் சேர்ந்த நாகராஜன் மனைவி ஜெயந்தி, காரைக்குடி பரதன் மகன் கிருஷ்ணகுமார், காரைக்குடி அண்ணாமலை மகன் ராமசாமி மற்றும் காரைக்குடி கிருஷ்ணன் மனைவி காளியம்மை ஆகியோர்களுக்கு கிரையம் கொடுத்துள்ள இடங்களிலும் சில பகுதிகள் வருகின்றன என்ற விபரம் தெரியவந்ததாகவும், மேற்படி இடத்தில் வேலுச்சாமி உயிருடன் இருந்த காலத்திலேயே 4 ஏக்கர் இடத்தை பிறத்தியில் கிரையம் செய்து கொடுத்தது போக பாக்கியுள்ள 1 ஏக்கர் இடமான வழக்கிடைச் சொத்தில் வேலுச்சாமியின் மக்கள் 3 பேருக்கும் ஆளுக்கொரு பாகம் உள்ளதாகவும், அதன்படி விஜயபோஸிற்கு கிடைத்த பாகம் போக பாக்கியுள்ள வாதி மற்றும் 2ம் பிரதிவாதி பாகத்திற்குரிய சொத்துக்களில் ஏதேனும் பந்தக பராதீனம் செய்து இருந்தால் அதை வாதியின் பாகத்தையோ, 2ம் பிரதிவாதியின் பாகத்தையோ கட்டுப்படுத்தாது. மேலும் அறிவிப்பு கடந்த 13.10.2022ம் தேதி அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட 1ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற மேற்படி 4 நபர்களும் எவ்வித பதிலும் அனுப்பாமலும், ஆனால் 1ம்

பிரதிவாதி மட்டும் மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டு, தன்னுடைய வழக்கறிஞர் மூலம் பொய்யான காரணங்களைக் கூறி கடந்த 27.10.2022ம் தேதி பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும், மேலும் இந்த வழக்கில் முறைப்படி பாகம் பிரித்துக் கொடுக்கக் கோரி பரிகாரம் மட்டும் கேட்டுள்ளதால் வாதி இவ்வழக்கின் மேற்படி 1ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற மேற்படி 4 நபர்களை தரப்பனர்களாகச் சேர்க்காமலும், எனவே வாதியும் நீதிமன்ற வரம்பிற்குட்பட்ட மேற்படி வேலுச்சாமிக்குப் பாத்தியப்பட்ட 1 ஏக்கர் சொத்தில் 3/1 பாகத்தினை நயமிடர் பார்த்துப் பிரிவினை செய்து தரக்கோரி இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) தாவாச் சொத்து வாதியின் தகப்பனார் வேலுச்சாமிக்கு கிரையப் பாத்தியப்பட்ட சொத்து என்பதற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், வேலுச்சாமி இறந்துவிட்டது தொடர்பாக அவரது இறப்பினை நிரூபிக்கும் வகையில் அவரது இறப்புச் சான்றிதழ் வா.சா.ஆ.2 ஆகவும், வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.3 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் வாரிசுகளில் சொர்ணவள்ளி, விஜயபோஸ் இறந்துவிட்டது வா.சா.ஆ.4, வா.சா.ஆ.5 மூலமாக தெரியவருகிறது.

9) வாதி தரப்பில் பாகப்பிரிவினை குடும்பத்தில் ஏற்படவில்லை என்பது குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. மேலும் விஜயபோஸ் தனது பாகத்தை பொறுத்து மட்டுமே தனது மனைவியான 1ம்பிரதிவாதி பெயருக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளது வா.சா.ஆ.6ன் அடிப்படையில் தெரியவருகிறது. மேலும், வாதி, பிரதிவாதிகள் இடையே பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்பதாலேயே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது புலனாகிறது. மேலும், இதுகுறித்து வா.சா.ஆ.7 அறிவிப்பு அனுப்பப்பட்டும், அதற்கு 1ம் பிரதிவாதியால் பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டிருந்தாலும், அவர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்தோ, சாட்சியம் அளித்தோ தனது தரப்பு வழக்கினை நிலைநிறுத்துவதற்கு முன்வரவில்லை. மேலும் பாகம் பொறுத்து மறுக்கப்படவில்லை.

10) எனவே, வாதி தரப்பு வழக்கினை பொய்ப்பிக்கும் வகையில், பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்து எதிர்வாதம் எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதாலும், வழக்கானது தனது பாகத்தை கோரியே

வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற நிலையில், வாதி தரப்பு வழக்கினை பிரதிவாதிகள் மறுக்க முன்வராத நிலையில், வாதி தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் அடிப்படையில் வாதி தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டதாக தீர்மானிக்கப்பட்டு, வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

முடிவாக, வாதிக்கு தாவாச் சொத்தில் 1/3 பாகம் கிடைக்கத்தக்கது என்ற முதல்நிலைத் தீர்ப்பாணை பரிகாரம் வழங்கப்பட்டு அசல் வழக்கானது தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 03-ம் நாள் பகரப்பட்டது.

(ஒம்.பா.கலை நிலா)
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.

**<u>வாதி தரப்பு சாட்சி:</u>**

வா.சா.1 – சுவாமிநாதன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | தன்மை |
|---|---|---|---|
| 1 | 27.09.1985 | வேலுச்சாமி, பெரியமுத்துவிடம் இருந்து பதிவுக் கிரையம் பெற்ற கிரைய பத்திரம் | சான்றிட்ட நகல் |
| 2 | -- | வேலுச்சாமி 11.12.2005 அன்று இறந்ததற்கான காரைக்குடி தலைமையிடத்து கூடுதல் தாசில்தார் வழங்கிய இறப்புச் சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| 3 | -- | காரைக்குடி வட்டாட்சியர் வழங்கிய | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | வேலுச்சாமியின் வாரிசு சான்றிதழ் | |
| 4 | -- | சொர்ணவள்ளி 31.10.2012ல் இறந்ததற்கான இலுப்பக்குடி கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய இறப்புச் சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| 5 | -- | விஜயபோஸ் 01.08.2017ல் இறந்ததற்கான அரியக்குடி பிறப்பு இறப்பு பதிவு அலுவலர் வழங்கிய இறப்புச் சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| 6 | 16.07.2008 | விஜயபோஸ் அவரது மனைவியான 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| 7 | 13.10.2022 | 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| 8 | 27.10.2022 | 1ம் பிரதிவாதியின் பதில் அறிவிப்பு | அசல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:</u>**

......இல்லை.........

(ஓம்.பா.கலை நிலா)

சார்பு நீதிபதி,

தேவகோட்டை.